**தலைப்பு 228 - நீதிமன்ற நிர்வாக திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 228 - நீதிமன்ற நிர்வாகத் திணைக்களத்தில் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 6,942.68 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 6,575.84 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 366.84 மில்லியன் அதாவது 5.28 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 5,488.03 | 5,352.67 | 135.36 | 2.47 |
| மூலதனம் | 1,454.65 | 1,223.18 | 231.47 | 15.91 |
| மொத்தம் | **6,942.68** | **6,575.85** | **366.83** | **5.28** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 22801 ஆம் விடய இலத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 400.00 | 377.94 | 230.00 | 279.05 | 1,200.00 | 984.23 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0328/0016/000 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 178.2 மில்லியனாகும்.

## 2.4 வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழுள்ள 05 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,594.05 மில்லியனாகும். விபரம் கீழே காண்பிக்கப்பட்டுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0001/0094/000 | 5,997.53 |
| 6000/0000/00/0002/0128/000 | 12.69 |
| 6000/0000/00/0013/0085/000 | 2,120.82 |
| 6000/0000/00/0014/0015/000 | 365.28 |
| 6000/0000/00/0016/0077/000 | 97.73 |
| | 8,594.05 |

### 2.5 கணக்காய்வு அவதானிப்பு

நீதிமன்ற நிர்வாகத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்குறிப்பிட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டமையை உறுதிப்படுத்தவதற்கான எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | இழப்பு தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்க வில்லை. |

## 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

22801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பட்டியலின் கூட்டுத்தொகைக்கும் இடையே ரூபா 12,259,540 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஆ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 23,346,657 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 30 ஆண்டுகள் வரையான கால வீச்சினைக் கடந்திருந்த போதிலும் அந்த நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 3.3 சொத்துக்களின் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2017 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தின் கீழுள்ள 189 நீதிமன்றங்களினதும் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2015 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| (அ) நிதிப் பிரமாணம் 94 | **7,454,359** | வருடாந்த மதிப்பீட்டு நிதிஏற்பாட்டின் சேமிப்புக்களை மிகைத்து கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப் பிரமாணம் 115(3) | 72,079 | 2016 ஆம் அண்டிற்குரிய செலவினங்களை 2017 ஆம் ஆண்டின் போது செலுத்துவதற்காக உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிதிப்பிரமாணம் 115(4) | 164,110 | 2014 ஆம் ஆண்டில் ஹோமாகம நீதிமன்றத் தொகுதியின் அடிக்கல் நட்டும் விழாச் செலவினத்தை 2017 சனவரி 03 ஆந் திகதி இலங்கை சட்டதரணிகள் சங்கத்திற்கு மீளளிப்புச் செய்வதற்காக உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. |

**3.5 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்தல்**

செயற்திட்டங்களை நிறைவேற்றுதில் தாமதம் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவத்தின் நலிவுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(i) கடந்த 03 ஆண்டுகளின் போது அமுல்படுத்தப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 447.35 மில்லியன் தொகையான சிறியளவிலான 26 நிர்மாண செயற்திட்டங்களில் 21 செயற்திட்டங்களுக்குரிய உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியதாகக் குறிப்பிடப்பட்ட திகதியில் வேலை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. தாமதக் காலம் ஒரு வருடத்திற்கு மேற்பட்டதாக இருந்தது.

(ii) 2013 மார்ச் 01 ஆந் திகதி வத்தளை நீதிமன்றத் தொகுதியை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் ரூபா 194.11 மில்லியன் தொகையான ஒப்பந்தப் பெறுமதியுடன் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2014 பெப்ரவரி 28 ஆந் திகதியளவில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 06 சந்தர்ப்பங்களின் போது ஒப்பந்தக்காலம் நீடிக்கப்பட்டிருந்த போதும் அத்திகதியில் நிதிச் செயலாற்றல் ரூபா 131.91 மில்லியன் மாத்திரமாக இருந்தது.

**3.6 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 386 | 425 | - | 39 |
| (ii) | மூன்றாம் நிலை | 445 | 253 | 192 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 5,351 | 4,310 | 1,041 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 4,121 | 3,834 | 287 | - |
| | மொத்தம் | 10,303 | 8,822 | 1,520 | 39 |